**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL ASSISTANT SESSIONS JUDGE, KANCHEEPURAM**

| | |
|---|---|
| Sessions Case No | SC.No.91/2023 |
| Primary Register Case No; | |
| Deposition of Witness for | Prosecution PW – 4 |
| | Defence |
| | Court |
| Name | கலைமணி |
| Father's Name | ஜுவரத்தினம் |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Regligion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 31th day of July 2026.

Signature of Witness

Name of the Interpreter: Tmt. V.Mohana, Head Clerk

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 31th day of July 2026.

Signature of Interpreter

முதல் விசாரணை

நான் தற்போது சாலவாக்கத்தில் வசித்து வருகிறேன். கம்யூட்டர் சென்டர் வைத்து தொழில் செய்து வருகிறேன். எதிரியை தெரியாது. இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.

கடந்த 22.11.2021 தேதி காலை 11 மணியளவில் சாலவாக்கம் குளத்தின் அருகே ராஜேந்திரன் என்பவர் நடந்து வந்தபோது எதிரே வந்த நபர் அவரை வழிமடக்கி பணம் எடுடா என்று மிரட்டிக்கொண்டிருந்தான் என்றும், அதற்கு ராஜேந்திரன் பணம் இல்லை என்று சொன்னதற்கு அந்த நபர் அசிங்கமான வார்த்தைகளால் பேசி இத்தோடு ஒழிந்துபோடா என்று சொல்லி ஓங்கி வெட்ட வந்தான் என்றும் இராஜேந்திரன் ஒதுங்கி கொண்டதால் அவர்மீது வெட்டு விழவில்லை என்றும் இல்லாவிட்டால் அவர் இறந்துபோயிருப்பார் என்றும், அவர் பாக்கெட்டிலிருந்த ரூ.500/–ஐ அவர் பிடுங்கிகொண்டான் என்றும், அந்த நபர் கத்தியால் பொறிபறக்கவிட்டான் என்பதால் ஜனங்கள் நாலா பக்கமும் சிதறி ஓடினார்கள் என்பதால் இது சம்பந்தமாக ரஜேந்திரன் சாலவாக்கம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததாகவும் போலிசார் விசாரணையில் தெளிவாக சொல்லிவிட்டு தற்போது சாட்சியத்தை மாற்றி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/– J.மோகனா,<br>
முதன்மை சார்பு நீதிபதி,<br>
காஞ்சிபுரம்.